

நெல்லை மாவட்டம் கே.டி.சி.நகர் மாதா மாளிகையில் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் வேளாண்மை தனி நிதிநிலை அறிக்கை 2025–26 திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தென்காசி, ராமநாதபுரம், விருதுநகர், கரூர், சிவகங்கை, புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகளிடம் கருத்து கேட்பு கூட்டம் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. வேளாண்மை உற்பத்தி ஆணையர் அரசு செயலர் தட்சணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை வேளாண் வணிகத்துறை ஆணையர் ஆபிரகாம், வேளாண்மை துறை இயக்குனர் முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குனர் குமாரவேல் பாண்டியன், சர்க்கரைதுறை இயக்குனர் அன்பழகன், மாவட்ட ஆட்சியர் சுகுமார், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் கீதாலட்சுமி, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல்வஹாப் (பாளை) ரூபி மனோகரன் (நாங்குநேரி)ராஜா (சங்கரன்கோவில்) மார்க்கண்டேயன் (விளாத்திகுளம்) சதன் திருமலை குமார்(வாசுதேவநல்லூர்) சண்முகையா (ஓட்டப்பிடாரம்) நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் ஆவுடையப்பன், மேயர் ராமகிருஷ்ணன், நகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, துணை மேயர் ராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெகதீஸ் உள்பட பலர் உள்ளனர்.

### செங்கல்பட்டில் 50 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் விழாவில் பங்கேற்க வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு திருக்கழுக்குன்றம் - செங்கல்பட்டில் மக்கள் திரண்டு மாபெரும் வரவேற்பு!

## மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

சென்னை, மார்ச் 7-

செங்கல்பட்டில் வருகிற 11-ஆம் தேதி 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் விழாவில் பங்கேற்க வருகைத் தரும் கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு திருக்கழுக்குன்றம் மற்றும் செங்கல்பட்டில் சாலை ஓரம் மக்கள் அணிவகுத்து நின்று மாபெரும் வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் கத்திப்பாரா சந்திப்பு அருகில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் ராஜீவ் காந்தி, பாஸ்கர் சுந்தரம், கே.எஸ்.ரவிச்சந்திரன், மயிலை தசரதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எல்.இதயவர்மன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், பெருங்களத்தூர் எஸ்.சேகர், எஸ்.இந்திரன், டி.காமராஜ், மாடம்பாக்கம்



நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், எம்.டி.லோகநாதன், நகரச் செயலாளர்கள் டி.பாபு, ஜெ.சண்முகம், எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தொ.மு.ச. பேரவைச் செயலாளர் இரா.பொன்னுராம், கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே. இப்ராகிம், கே.எத்திராஜ், ஆர்.எஸ்.சங்கர், எம்.செல்வகுமார், மா.கணேஷ்பாபு, இரா.பாஸ்கரன், செ.அருள்தேவி, மு.ரஞ்சன்,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், தையூர் வீ.விஜயகுமார், டி.கே. கமலகண்ணன், கே. மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, எஸ்.ஆல்பர்ட், ஜா.செந்தில்தேவராஜ், பா.ஞானபிரகாசம், தி.க.பாஸ்கரன், சசிகலா, த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், பொன்.ரமேஷ் கவி, ஜான் தினகரன், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டம், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ. சத்தியபிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:-

நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் மார்ச் 10, 11 ஆகிய இரு தேதிகளில் நம்முடைய மாவட்டத்திற்கு வருகை தருகிறார்.

10-ஆம் தேதி மாலை, நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்கள், சென்னை கடற்கரை இ.சி.ஆர். சாலை வழியாக வருகை தந்து, மாமல்லபுரம் அருகே ஓ.எம்.ஆர். சாலையில் பையனூர் சிப்காட்டில் அமைக்கப்பட்டுள்ள தனியார் தொழிற்சாலையை திறந்து வைத்த பிறகு, அவர் மாமல்லபுரத்தில் நடைபெறும் மாவட்ட கழக நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகிறார்.

இக்கூட்டத்திற்கு அழைப்பிதழ் அனுப்பப்படும். மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தாம்பரம் மாநகர செயலாளர் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் செயலாளர்கள், மாநகர வட்ட செயலாளர்கள் ஆகியோற் அவசியம் இக்கூட்டத்திற்கு கலந்துகொண்டு சிறப்பிப்பது என்றும்,

நம்முடைய உயிரினும் மேலான தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள், 11-ஆம் தேதி காலை மாமல்லபுரத்தில் இருந்து புறப்பட்டு திருக்கழுக்குன்றம் வழியாக செங்கல்பட்டு நகரை வந்தடைகிறார்.

திருக்கழுக்குன்றம் மற்றும் செங்கல்பட்டில் நடைபெறும் Road Show மக்கள் சந்திப்பு வரவேற்பு நிகழ்ச்சியில், சாலையின் இடதுபுறம் பொதுமக்கள் அனைவரும் அணிதிரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்திட பிரம்மாண்டமான ஏற்பாடுகளை செய்திட வேண்டும் என்றும்.

திருக்கழுக்குன்றத்தில் நடைபெறும் மக்கள் சந்திப்பு வரவேற்பு நிகழ்ச்சியில், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள ஒன்றிய - நகர- பேரூர் கழகத்தினர் அணிதிரண்டு பங்கேற்று சிறப்பிப்பது என்றும்,

செங்கல்பட்டு நகரில் இராட்டினகிணறு சந்திப்பு மேம்பாலத்தில் இருந்து சி.எம்.சி மருத்துவமனை திருமணி சந்திப்பு வரை செங்கல்பட்டு, ஆலந்தூர், திருப்பெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம் ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளில் அடங்கியுள்ள ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகத்தினர் தமது கரங்களில் கழகக் கொடி வரவேற்பு பதாகைகளை ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு பங்கேற்று சிறப்பிப்பது என்றும், பொதுமக்கள் தரும் உற்சாக வரவேற்பிற்கு பின்பு, செங்கல்பட்டு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலக மைதானத்தில் 50 ஆயிரம் நபர்களுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் பல்லாயிரக்கணக்கில் அணிதிரண்டு பங்கேற்பது என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. ஒருமனதாக தீர்மானிக்கிறது.

தமிழினம் காக்க தன்னையே அற்பணித்துக் கொண்டு, அல்லும் - பகலும் அயராது உழைத்து வரும் தரணி போற்றும் தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களின் 72-வது பிறந்த நாள் விழாவையொட்டி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில்,

வருகிறர் 15-ம் தேதி மாலை கண்டோன்மெண்டில் அமைந்துள்ள மான்போர்ட் பள்ளியில் 1500 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு துணை முதல்வர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று நலத் திட்ட உதவிகளை வழங்குகிறார்.

மிகவும் கோலாகலமாக நடைபெற உள்ள இந்த நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அணிகளின் மாவட்ட - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த கழகத்தினரும் அலைகடலென அணிதிரண்டு வந்து பங்கேற்பது என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக முடிவெடுக்கிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை யொட்டி காஞ்சிபுரம் மாநகராட்சியில் பகுதி கழகம் 2 சார்பில் பகுதி செயலாளர். எஸ்.சந்துரு ஏற்பாட்டில் நல திட்டங்கள் மற்றும் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமை கழக பேச்சாளர் சூர்யா வெற்றி கொண்டான், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்டு கே.ஆறுமுகம், மேயர் திருமதி.மகாலட்சுமி யுவராஜ், மாநில தொண்டர் அணி சுகுமாரன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அ.யுவராஜ், பகுதி செயலாளர்கள் கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், மாநகர நிர்வாகிகள் கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்து செல்வம், கே.சுப்பராயன், நிருபர் ஜாபர் மாமன்ற உறுப்பினர் சுரேஷ், வட்ட செயலாளர் தெய்வசிகாமணி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை – பள்ளிக்கரணை, காமகோடி நகரில், சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மத்திய பகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72–வது பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற ”சொல்லைச் செயலாக்கும் சூரியன் என்ற தலைப்பில் நடைபெற்ற வாழ்த்தரங்கத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கி திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்துரை வழங்கினார். உடன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பாராளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்றத் உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், .காரபாக்கம் கணபதி, பிரபாகர் ராஜா, திமுக மாநில மகளிரணி சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஷ்வரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### சனாதனம் குறித்த பேச்சு தொடர்பாக

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மீது புதிய வழக்கு பதிய தடை!

## உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு!

புதுடெல்லி, மார்ச் 7-

சனாதனம்குறித்துபேசியவிவகாரத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக எந்த ஒரு வழக்கையும் பதிவு செய்ய கூடாது என்று உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

சனாதன தர்மம் குறித்து பேசிய விவகாரம் தொடர்பாக மஹாராஷ்டிரா, பீகார், கர்நாடகா, ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட மாநிலங்களில் தனக்கு எதிராக பதியப்பட்டுள்ள வழக்குகள் அனைத்தையும் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவானது தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது உதயநிதி ஸ்டாலின் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் மனு சிங்வி, பி.வில்சன் ஆகியோர், இந்த விவகாரம் தொடர்பான வழக்கை ஒரு வேளை சென்னை உயர்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்ய முடியவில்லை என்றால், கர்நாடகாவுக்கு மாற்ற வேண்டும். குறிப்



பாக மிக மோசமான முறையில் விமர்சனம் செய்திருந்த நுபுர் சர்மா, அர்னாப் கோஸ்வாமி ஆகியோர்களின் வழக்குகள் மாற்றம் செய்யப்பட்டது. இதனை நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும்' என்றனர். ஒன்றிய அரசு தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, “சனாதனம் தொடர்பான விவகாரத்தில் துணை முதல்வராக இருக்கும் உதயநிதி பொறுப்பற்ற முறையில் பேசியுள்ளார் என்றார். இரு தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், இந்த விவகாரத்தில் தற்போது கூடுதலாக ஒன்றும் கூறப்போவது கிடையாது.

மேலும் தகுதியின் அடிப்படையிலும் தற்போது விசாரணை செய்யவில்லை. இருப்பினும் இந்த விவகாரத்தில் உதயநிதி தொடர்ந்த வழக்கிற்கு எதிர்மனுதாரர்கள் அனைவரும் இன்றைய தினத்தில் இருந்து அடுத்த ஒரு வாரத்தில் பதிலளிக்க வேண்டும் என்று நோட்டீஸ் பிறப்பிக்கப்படுகிறது. இதையடுத்து அதற்கு அடுத்த 15 நாட்களில் வழக்கில் பதில் மனுவை தாக்கல் செய்ய வேண்டும். மேலும் சனாதனம் தொடர்பான விவகாரத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக இனிமேல் எந்த ஒரு வழக்கும் பதிவு செய்யக் கூடாது என்று உத்தரவிட்ட நீதிபதிகள், அடுத்த விசாரணையை ஏப்ரல் மாதம் இறுதிக்கு ஒத்திவைத்தனர். அதுவரையில் இந்த விவகாரத்தில் முன்னதாக பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு தொடரும் எனவும் நீதிபதிகள் தெரிவித்தனர்.


